செ.வெ.எண்.06 நாள்.04.07.2017.

**பத்திரிக்கைச் செய்தி**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, சட்டப் பிரிவு 12(1) (சி)ன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கான சேர்க்கை இணைய வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சேர்க்கைக்கான குழந்தைகளைத் தெரிவு செய்யும்பணி 31.05.2017 அன்று அனைத்து பள்ளிகளிலும் நடைபெற்றது. மேலும் 31.05.2017 அன்று சேர்க்கை நடைமுறைகளுக்கு பிறகு காலியாக இருந்த இடங்களுக்கு 20.06.2017 அன்று நேரடிச் சேர்க்கை /குலுக்கல் முறை மூலம் சேர்க்கை வழங்கப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட இடங்கள் முழுமையாக நிரப்பப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதிக அளவில் பயன்பெறும் நோக்கிலும், இரண்டாம் கட்டமாக இணையவழியாக சேர்க்கை நடைமுறைகள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி வாரியாகக் காலியாக உள்ள இடங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

03.07.2017 முதல் 25.07.2017 வரை இணைய வழியாக விண்ணப்பிக்கலாம்.

28.07.2017 அன்று பள்ளி வாரியாக விண்ணப்பிக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியல் பள்ளிகளுக்கு அனுப்பப்படும்.

29.07.2017 அன்று சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்குத் துறைசார்ந்த பிரதிநிதியை நேரில் அனுப்பித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களில் தகுதியான குழந்தைகளுக்கு 20.06.2017 அன்று கடைபிடிக்கப்பட்ட முறைப்படி சேர்க்கை வழங்கவும், தேவை ஏற்படின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முதற்கட்ட சேர்க்கையின் போது முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம், வட்டார வள மையம், அரசு இ–சேவை மையங்களிலிருந்து இணைய தள வழியாக விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டது போன்றே இம்முறையும் இணைய வழியில் விண்ணப்பிக்கலாம். மேலும் பள்ளிக்கு நேரடியாக சேர்க்கைக்கு வரும் பெற்றோர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று பள்ளியிலேயே இணையதளத்தில் பதிவேற்றம் செய்யலாம். இந்த அரிய வாய்ப்பை பெற்றோர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். www.dge.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.